
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | ஜனவரி 1990 | இதழ் 1

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-628 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஞாயிறு காலை 9 மணி முதல் 11 மணி வரை-ஆராதனை
,, ,, 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை - ஞாயிறு பள்ளி

செவ்வாய் மாலை 7 மணி—குடும்ப ஜெபம்

புதன் மாலை 3 மணி (ஒருவாரம் விட்டு ஒருவாரம்) பெண்கள் ஐக்கியக் கூட்டம்

வியாழன் மாலை 7 மணி—வேத ஆராய்ச்சி வகுப்பு

வெள்ளி மாலை 7 மணி—குடும்ப ஜெபம்

சனி மாலை 7 மணி—ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே

1) வைத்தியனே, முதலில் உன்னைக் குணமாக்கிக் கொள்
2) விதைக்கிறவனுடைய உவமை
3) என்னிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது என்ன?
4) தர்ப்பூசணி விதை
5) தெரிந்து கொள்ளுங்கள்
6) பழைய - புதிய ஏற்பாடுகளின் இடைக்காலம்.
7) கிறிஸ்தவ அறத்தின் நான்கு தூண்கள்

# THIRUMARAI AASAAN

Editor :
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J C. CHOATE

★ ★ ★

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu, India**

Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 3. January 1990 Issue 1


ஆசிரியவுரை

## வைத்தியனே, முதலில் உன்னை குணமாக்கிக்கொள்!

ஒரு சமயம் 'டீக்'காக உடை அணிந்து கொண்டு, ஒரு மனிதன் கூந்தல் தைலம் விற்றுக் கொண்டிருந்தான். நல்ல திறமையான பேச்சாற்றல் உள்ளவன். தான் விற்கும் தைலத்தின் நற்பயன்களைப்பற்றி மக்கள் நம்பத்தக்க வ்கையில் விவரித்துச் சொன்னான். சினிமா உலகில் புகழ்பெற்று விளங்கும் பிரபல நடிகைகளும், அரசியலில் கவர்ச்சிப் பாவைகளாக உலா வரும் காரிகைகளும், கல்லூரி மாணவிகளும் அவர் விற்கிற தைலத்தை உபயோகித்தே கரிய, நெடிய கூந்தலைப் பெற்றிருக்கின்றனர் என்று பல சான்றுகளை ஆதாரத்துடன் காட்டி மக்களின் ஆர்வத்தைத் தூண்டினான்

மக்களும் அவனுடைய வார்த்தைகளை நம்பி நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வாங்கிக் கொண்டிருந்தனர். விற்பனை வெகு வேகமாக நடந்தது. விற்பனையாளனுக்கு படுகுஷி! ஆர்வமாக அப்படியும், இப்படியும் ஓடி, ஆடிப் பணியாற்றிய நேரத்தில் அவர் அணிந்திருந்த குல்லாய் நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவருடைய தலையெல்லாம் ஒரே வழுக்கை; ஒரு முடி கூட இல்லை

இதைக் கண்ணுற்ற ஒரு ஆள், ஆச்சரியம் கலந்த குரலில், "என்ன ஐயா, உங்கள் கூந்தல் தைலத்தின் மேன்மை இவ்வளவு தானா? நீங்கள் சொல்லுகிற மாதிரி இது ஓர் அற்புதமான தைலம் என்றால் உங்கள் தலையில் ஏன் ஒரு முடி கூட இல்லை? நீங்கள் ஏன் இந்த அற்புத வல்லமை படைத்த தைலத்தை உபயோகித்துப் பயன்பெறவில்லை?" என்று சரமாரிக் கேள்விகளைத் தொடுத்தான்.

விற்பனையாளனுக்கு வேர்த்து, விறு விறுத்துப் போயிற்று. பேச நா எழவில்லை. வெட்கித்தலை குனிந்தான் அதைக் கவனித்த மக்கள் விழிப்படைந்து, அவர் மீதும், அவர் விற்கும் தைலத்தின் மீதும் சந்தேகப்பட்டனர். தாங்கள் வாங்கின தைலத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்து விட்டுத் தங்கள் பணத்தை வாப்பஸ் செய்ய வேண்டும் என்று கலாட்டா செய்தனர்.

கலாட்டா அதிகமாகவே காவல்துறையினர் தலையிட்டு விசாரித்தனர். அந்த தைலத்தை சோதனைக்கு அனுப்பினர். தைலத்தில் குறையேதும் இல்லையென்று தீர்ப்பு வழங்கினர் பரிசோதனையாளர்கள். ஆனால் அதை விற்ற ஆசாமி பொருத்தமில்லாதவர். பாவம்! படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரியாம். வேலையே கிடைக்க வில்லையாம். வயிற்றுப் பிழைப்புக்காக இந்த வேலையைப் ஏற்றுக் கொண்டாரம்.

கிறிஸ்தவத்தைப் பரப்ப முற்பட்டிருக்கும் நண்பர்களே! இந்த நிகழ்ச்சியில் வர்ணிக்கப்பட்டிருக்கும் நிலைமையில் தான் நாமும் இருக்கிறோம் என்று ஒத்துக் கொள்வதற்கு நாம் வெட்கப்படவோ, போலித்தனமான காரணங்களை முன்வைக்கவோ, முன்வைக்க முயன்று மீண்டும் ஒரு பாவத்தைக் கூட்டிக் கொள்ளவோ வேண்டாம். மாறாக, நம்மை நாமே சோதித்துப் பார்த்து நம்முடைய குறைகளைக் களைவதற்கு முற்படுவோம். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி 28 : 13).

நம்மில் அநேகர் நாம் போதிக்கிறது இன்னதென்றும், சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதவர்களாக இருந்தும் நியாயப்பிரமாண போதகர்களாயிருக்க விரும்புகிறோம் (1 தீமோ 1 : 7) தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதன் பலன்களை மறுதலிக்கும்

இயல்புள்ளவர்களாக இருக்கிறோம். (2 தீமோ 3 : 5) நாமே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும். மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை வாரி வழங்குகிறோம் (2 பேதுரு 2 : 19) முதலாவது நாம் இந்தப்பரிதாபமான நிலையிலிருந்து விடுபட முயல்வோம். பிறகு மற்றவர்களை இரட்சிப்புக்குள் நடத்தப் பிரயாசப்படுவோம். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்கிறாரே பவுல்! (1 கொரி 9 : 27) அப்படியிருக்க நாம் வெட்கப்பட்டுக் கொண்டு நம்முடைய நிலையை சீர் தூக்கிப்பார்க்க மறுப்பது நியாயமா? அறமா?

சுமார் மூன்று நூற்றாண்டுக்கும் அதிகமான காலக் கெடுவில், பெரும் பணச் செலவழித்து பல முயற்சிகளை மேற்கொண்டும் நம்முடைய நாட்டின் மூன்று விழுக்காடு மக்களுக்குக் குறைவான மக்களையே கிறிஸ்தவத்தை ஏதாவது ஒரு வகையில் (முழுமையாக அல்ல) ஏற்றுக் கொள்ள வைத்திருக்கிறோம்.

ஆனால் அதே நேரத்தில் சுமார் 50 ஆண்டு காலங்களுக்கும் குறைவான கால கட்டத்தில், தற்காலத்து நவீன வசதிகள் ஏதும் இல்லாத காலத்தில், அன்றைக்கு உலகம் என்று கருதப்பட்ட பூபாகத்தில் எங்கும் கிறிஸ்தவத்தை அறிவித்து விட்டதாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குக் குறைவான மக்கள் பெருமிதப் பட்டுக்கொகிள்ன்றனர். (ரோமர் 15: 19, 23: அப் 17: 6) அவர்களால் செய்ய முடிந்ததை, எண்ணிக்கையில் அதிகமுள்ள, பல வியத்தகு விஞ்ஞான சாதனைகளைப் பெற்றிருக்கிற நம்மால் ஏன் முடியவில்லை? சுவிசேஷத்தின் பெலன் குன்றிப் போயிற்றா? அது எப்போதும் போல் இரட்சிப்புக்கு தேவ பெலனாகவே இருக்கிறது (ரோமர் 1 : 16) உலகத் தோற்றத்தின் போது உண்டாக்கப்பட்ட வித்துக்களில் காணப்படுகின்ற உயிர் அணுக்கள் இன்றைக்கும் அதே வீரியத்தில் தானே இருக்கிறது! அப்படியிருக்க இரட்சிக்கப்படுவதற்கு தேவனால் கொடுக்கப்பட்ட திட்டம் மட்டும் எப்படிச் செயலிழந்து போகும்? ஆகவே, வித்தாகிய தேவ வசனத்தில் எவ்விதக் குறைபாடும் இல்லை (லூக் 8 : 11) என்பதில் ஐயமில்லை. அப்படி ஆனால், அதை எடுத்து இயம்புகிறவர்களின் வாழ்க்கையிலும் நோக்கத்திலும் தான் குறைபாடு இருந்தாக வேண்டும். அன்றைக்கு சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்தவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று முதலாவது தாங்கள் விசுவாசித்தனர், அவர் செய்த தியாகத்-

தையும், சேவையையும், வாழ்க்கை முறையையும் அப்படியே, பின்பற்றினர். கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் பட்டனர். உயிரையும் இழப்பதற்குத் தயக்கம் காட்டவில்லை. சரீரத்தைக் கொன்று ஆத்துமாவை ஒன்றும் செய்ய முடியாதவர்களுக்கு அவர்கள் அஞ்சி, கொள்கையை விட்டுவிடவில்லை; மாற்றிக்கொள்ளவில்லை. மாறாக எங்கும் திரிந்து சுவிஷேத்தைப் பிரசங்கித்தனர் (அப் 8 : 4) கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லால் கூறி செயலால் பாடுகள் பல பட்டனர். பிலி 1 : 21.

இன்று நாம் என்ன சொல்லுகிறோம்? செய்கிறோம்? நம்முடைய சொல்லும், செயலும் வெவ்வேறு திசைகளில் பயணம் செய்வதை எவரும் பார்த்து எளிதில் புரிந்து கொள்ளும் அளவுக்கு அப்பட்டமாகத் தெரிகிறது. வாய் வானமே, வானமே என்று கூறுகிற நேரத்தில், கை பூமியைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது. பண ஆசையும், சுய விளம்பரமும், பதவி வெறியும், மாய்மாலமும் நம்மை ஆட்டிப்படைக்கின்றன. பரலோகத்துக்குப் போக விரும்புகிறவர்களைக் காண்பது அரிது. அப்படியே விருப்பம் இருக்கிறது என்று சொன்னாலும் அதுவும் ஒரு நடிப்பே. கையில் பைபிள் இல்லாத ஊழியர்கள் அநேகரைப் பார்க்கமுடியும். ஆனால் பாஸ்-போர்ட் இல்லாத ஊழியரைப்பார்ப்பது அரிது ஆவிக்குரிய தன்மைகளையும், வேத அறிவையும் வைத்து ஊழியர்களை எடைபோட்டது ஒரு காலம்; இப்பொழுது அவர் வைத்திருக்கிற வங்கி இருப்பு (Bank Balance), அவர் வசிக்கும் வீடு, அவர் உபயோகிக்கும் வாகனம்; அவர் உடுத்தியிருக்கிற உடை இவைகளை வைத்து எடைபோடுகிறார்கள் என்பது உண்மை தான்! அதற்காக? நாம் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பலாமா? (யோவான் 12 : 43.)

நம் நாடு மூட நம்பிக்கைகளின் விளைநிலம் என்பது உலகறிந்த உண்மை. அதை விரட்டியடிக்க அவ்வப்பொழுது பல சமய சீர்-திருத்த வாதிகள், பகுத்தறிவு வாதிகள் தோன்றி, மூடநம்பிக்கையை

ஒழிப்பதில் ஓரளவு வெற்றிகண்டனர். அவர்களால் விரட்டியடிக்கப்பட்ட மூடநம்பிக்கைகள் எல்லாம் கிறிஸ்தவத்துக்குள் புகுந்துவிட்டனவோ என்று ஐயுறும்படி ஊருக்கு ஒரு கும்பல் பல பெயர்களால் இயங்கி வருகின்றன. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் சத்தான உயர்நெறிகளை யெல்லாம். உரித்தெடுத்து உலையில் போட்டு விட்டு வேற்று சமயங்களிலிருந்து விரட்டப்பட்ட மூடநம்பிக்கைகளுக்குப் புதுச் சாயம் பூசி விற்பனை செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமம் இப்படிப்பட்ட இழிநிலைகள் வரும் என்று முன்பே எச்சரித்து இருப்பதை நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொண்டு விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏமாந்தோ அல்லது அப்படி சத்தியத்தைத் திரித்துப் பிரசங்கிப்பதால் நமக்கு கிடைக்கும் சில அற்ப சுகங்களுக்கு அடிமையாக வாழ்வோமானால் தேவ ஆக்கினைக்குத் தப்பவே முடியாது. தயவு செய்து 2 பேதுரு 2-ம் அதிகாரம் முழுவதையும் ஜெபத்துடன் வாசித்துத் தியானிக்கவும்.

**E Z. செல்வநாயகம்.**

பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தம் உள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.

ஏழையைப் பரியாசம் பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்;

குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான்; கோட்டதைச் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்து விடுகிறான்.

மூடனை நூறடி அடிப்பதைப் பார்க்கிலும், புத்திமானை வாயினால் கண்டிப்பதே அதிகமாய் உறைக்கும்,

தன் மதிகேட்டில் திரியும் மதியீனனுக்கு எதிர்ப்படுவதைப் பார்க்கிலும், குட்டியைப் பறிகொடுத்த கரடிக்கு எதிர்ப்படுவது வாசி.

நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ அவன் வீட்டை விட்டுத் தீமை நீங்காது.

# விதைக்கிறவனுடைய உவமை

இயேசு கிறிஸ்து அடிக்கடி தம்முடைய சீஷர்களிடம் உவமையில் பேசினார். உவமை என்பது மக்களுக்கு எளிதில் விளங்கக் கூடிய வகையில் அன்றாடம் பார்க்கிற, கேட்கிற, அனுபவிக்கிற விஷயங்களைச் சொல்லி, ஆன்மீகக் காரியங்களை விளக்குவதற்குக் கையாளும் ஒரு யுக்தியாகும்.

மத்தேயு நற்செய்தி நூலின் 13-ம் அதிகாரம் 1—9 வசனப் பகுதியில் விதைக்கிறவனைப் பற்றி ஒரு உவமை சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து 18 முதல் 23 வரை உள்ள வசனங்களில் அந்த உவமையின் அர்த்தமும் சொல்லப் பட்டிருக்கிறது. ''ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள். ஒருவன் இராஜ்ஜியத்தின் வசனத்தைக் கேட்டும், உணராதிருக்கும்போது பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான். அவனே வழியருகே விதைக்கப் ட்டவன்

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத் தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்

ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய் கொஞ்சக் காலம் மாத்திரம் நிலைத்திருப்பான். வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டான வுடனே இடறலடைவான்.

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவனும் பலனற்றுப் போவான்.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும், உணருகிறவனுமாயிருந்து நூறுகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

மேற் சொன்ன உவமையிலும் அதன் விளக்கத்திலும் விதைக்கிறவன் என்பது ஒரு பிரசங்கியையோ அல்லது போதகனையோ குறிக்கும். சத்தியம் எழுத்து மூலமாகவோ, வானொலி மூலமாகவோ தொலைக் காட்சி மூலமாகவோ பிரசங்கிக்கப் படலாம். இயேசு, ''நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப்

பிரசங்கியுங்கள்'' என்றார். (மாற்கு 16.15) பவுல் அப்போஸ்தலன் 'ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்கிறார் (ரோமர் 10:17)

அடுத்து விதை என்பது தேவனுடைய வசனம் என்று லூக்கா கூறுகிறார் (லூக் 8:11)

அதை இராஜ்ஜியத்தின் வசனம் என்றும் சொல்லலாம். ஏனெனில் ஒருவன் வசனமாகிய வித்தை தன் இருதயத்துக்குள் ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்படையும் போது, அவன் தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையில் அங்கமாகிறான் (மாற்கு 16:16; அப் 2:47) ஒருவனுடைய இருதயத்துக்குள் விதைக்கப் பட்ட தேவனுடைய வசனத்தை பொல்லாங்கன் வந்து பறித்துக் கொள்ளுகிறான் என்று இங்கு குறிப்பிடுவது சாத்தானைத்தான்.

அடுத்து, இத்த உவமையில் சொல்லப்பட்டுள்ள நான்கு வித மான நிலங்கள் வசனத்தைக் கேட்கிற நான்கு விதமான இருதயங் களைக் குறிக்கிறது. முதலாவது, மக்கள் அடிக்கடி அதன் மீது நடப்பதினால் கடினப்பட்டுப் போன நிலம், அப்படிப்பட்ட நிலம் உழவுக்குச் சிக்காததால் பண்படாமல் இருக்கும். அப்படிப்பட்ட நிலத்தின் மீது சில விதைகள், விதைக்கும் போது விழுந்து விடும். அவைகள் உழுது மூடப்படாமல் இருப்பதால் பறவைகள் கண்களுக்குப் ''பளிச்'' என்று தெரியும் ஆகவே அவைகளைக் பறவைகள் பொறுக்கிப் போடும். இப்படிப் பட்ட நிலத்தைக் கீழ்க்காணும் நபர்களுக்கு ஒப்பிடலாம். இவர்கள் இன்ன நேரத்தில் தான் ரேடியோவில் தேவ செய்தி வரும் என்று தெரியாமல், தற் செயலாக தாங்கள் ரேடியாவைத் திருகின நேரத்தில் ஒரு தேவச் செய்தியைக் கேட்கும் நிர்பந்தம் ஏற்பட்ட ஒருவருக்கோ அல்லது நண்பனுடைய கட்டாயத்துககாக ஒரு நற் செய்திக் கூட்டத்தில் கலந்து கொண்டு அதில் பிரசங்கிக்கப் படுவதைக் கவனிககும் ஆர்வமில்லாதவருக்கோ அல்லது தன் மீது திணிக்கப்பட்ட ஒரு சுவிசேஷக் கைப்பிரதியை வாங்கிப் பார்த்து விட்டு தூக்கியெறியும் ஒரு நபருக்கோ ஒப்பிடலாம். அப்படிப் பட்டவர்கள சத்தியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பாத மனநிலை உள்ளவர்களான படியால், சத்தியம் அவர்களுக்குள் எந்தவிதமான மாற்றத்தையும் செய்ய முடியாமல் போய் விடுகிறது.

அடுத்து, கற்பாறை நிலம், பாலஸ்தீனு நாடு குன்றும் குழியும் பாறையும் நிறைந்த பிரதேசம் சில வேளைகளில் விதைக்கப்படும் விதைகள் கற்பாறை மீது விழுந்து விடும். அதில் கொஞ்சம் மண் மட்டுமே இருக்கும். அது விதை முளைப்பதற்குப் போதும் ஆனால் சிறிது நாட்களில் வேர் ஆழமாகப் போக முடியாத காரணத்தாலும் வெயில் காய்வதாலும் அது சீக்கிரம் கருகி உலர்ந்து போகும், அது போன்று சில மனிதர்கள் சத்தியத்தை ஆர்வத்தோடு கேட்டு, கீழ்ப் படியவும் செய்வர், மிக உற்சாகமாகவும் இருப்பார்கள். ஆனால் சத்தியத்தினிமித்தம் இடறல்கள் வந்தால் உடனே தடுமாறி விழுந்து விடுவார்கள் அனுபவக் குறைவால் சோதனைகளைக் கண்டு துவண்டு இடுவார்கள் அதனால் தான் இயேசு, சீஷர்களா வதற்கு முன்பு சீஷத்துவத்தின் விலையைப் பற்றி சிந்தியுங்கள் என்கிறார்.

மூன்றுவது ரகமான நிலம் முட்கள் நிறைந்தது.

இந்த நிலத்தில் விழுந்த விதைகள் செழிப்பாக வளரும், ஆனால் கூடவே முட்களும், செடி செத்தைகளும் வளர்ந்து ஒன்றுடொன்று பின்னிப் பிணைந்து கொண்டு பயிரை சரியாக வளர விடாமலும் கனி கொடுக்க விடாமலும் செய்து விடும். அதே போன்று, சில மனிதர்கள் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு விசுவாசத்தில் முன்னேற விரும்புவார்கள். ஆனால் அவர்களுடைய கூடா நட்பும் அவர்கள் கைக்கொண்டிருக்கும் தீய பழக்க வழக்கங்களும் அவர்கள் கர்த்தருக்காக எழுந்து நிற்க முடியாமல் பின்வாங்கிப் போகச் செய்யும். கிறிஸ்தவ அறநெறிகளைப் பின்பற்றுவதற்கு அவைகள் முட்டுக் கட்டைகளாக அமைந்து விடும். ஆகவே அவர்கள் கனி கொடுக்கிற கிறிஸ்தவர்களாக மாற முடியாமல் போய் விடுகிறது. "இரண்டு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்ய முடியாது" என்றும் (மத் 6:24) 'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தானே வெறுத்துத் தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வரக் கடவன் (லூக் 9:2 ) இங்கே அனுதினமும் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள் குருத்தோலை ஞாயிறு அன்று மட்டுமல்ல; வாரத்தில் ஒரு நாள் மட்டும் அல்ல; அனுதினமும்.

நான்வதாக நல்ல நிலம். அதாவது கல், முள் பொறுக்கி உழுது பண்படுத்தப்பட்டு நீர் வளமும் பொருந்தின நிலம்.

அப்படிப்பட்ட நிலம் ஆசீர் வதிக்கப்பட்டது அதில் திட்டமிட்டபடி மகசூல் கிடைக்கும். அது போன்று சில மனிதர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தால் கவனமாகக் காது கொடுத்துக் கேட்பார்கள். அதைப் பற்றி சிந்தனை செய்வார்கள். சொல்லப்பட்டவைகளை வேத வசனங்களின் அடிப்படையில் ஆய்ந்து பார்ப்பார்கள்; அதன்படி நடக்க முயற்சிப்பார்கள் அப்படிப்பட்ட நன்மக்களையே தேவன் நேசிக்கிறார்- அப்படிப்பட்ட நன்மக்களைக் கொண்ட சபையே கர்த்தருடைய வசனத்தை எடுத்துச் சென்று பல மக்களுக்கு போதித்து ஆத்தும ஆதாயப் செய்யும்.

இப்போது இதை வாசிக்கிற உங்களுக்குச் சில கேள்விகள் நீங்கள் எப்படிப்பட்ட நிலத்தைப் போன்று இருக்கிறீகள்? நீங்கள் சத்தியத்தைக் கேட்கும் போது அதை ஆழ்ந்து கவனித்துச் சிந்தனை செய்கிறீர்களா? அல்லது சாத்தான் அவைகளை உங்கள் உள்ளத்திலிருந்து பொறுக்கிப் போடும்படி அனுமதிக்கிறீர்களா? ஒரு வேளை நீங்கள் சத்தியத்தைக் கேட்டு அது உண்மை என்று ஒப்புக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியவும் விரும்புவீர்கள், ஆனால் இன்னும் கொஞ்ச காலம் ஆகட்டும்; பிறகு பார்க்கலாம் என்று காலம் கடத்துகிறீர்களா? அப்படிக் காலம் தாழ்த்துவீர்களானால் சத்துரு தன் வேலையைக் காட்டுவான். பல பிரச்னைகளை உருவாக்குவான் கள்ளப் போதகர்களைக் கொண்டு நீங்கள் பொய்யை விசுவாசிக்கும் படி தவறான உபதேசங்களைப் போதிப்பான. சில வேளைகளில் அவனுடைய இதோபதேசம் உங்களுடைய மனதுக்கு சத்தியத்தை விட ஏற்புடையதாகக் கூட இருக்கும் அல்லது சத்தியத்தின்படி உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்க முடியாமல் உங்கள் உலகியல் பற்றும் உங்கள் நண்பர்களும் உங்கள் தீய பழக்க வழக்கங்களும் தடையாக இருக்கின்றதா? ஏசாவைப் போல ஏமாந்து போய்விடாதீர்கள் ஆன்மாவின் விலை மிக உயர்ந்தது.

உங்கள் இருதயம் பண்பட்ட நிலத்தைப் போல இருக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாகக் கர்த்தருடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், தீமைகளை விட்டு விலகும்படி தேவனுடைய வசனங்களை நீங்கள் வாசித்து தியானிக்கவும் கிறிஸ்தவ வாழ்க்கை நெறிகளில் முன்னேறவும், கர்த்தர் விரும்பும் வழியில் நடக்கவும் ஒரு வேளை நீங்கள் இன்னும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் இன்றே ஒரு நல்ல தீர்மானத்துக்கு வரவும் ஜெபிக்கிறேன். நன்று என்பதை அன்றே செய்க என்பது முதுமொழி "இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம்; இன்றே இரட்சண்ய நாள்" 2 கொரி 6:2

**J. C. சோட்**

# என்னிடமிருந்து எதிர்பார்க்கப் படுவது என்ன?

நாம் தேவனிடத்திலிருந்து எத்தனையோ விதமான நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் எதிர்பார்க்கிறோம் அதில் தவறு இல்லை. ஆனால் தேவன் கூட நம்மிடத்திலிருந்து சிலவற்றை எதிர்பார்க்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஆம் நண்பர்களே! தேவன் நம்மிடருந்து எதிர்பார்க்கிற சிலவற்றை கீழே கொடுத்திருக்கிறோம். வாசித்துப் பின்பற்றுங்கள்.

**அவர் சொல்லுவதைக் கேட்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.**

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்; ஜெயங் கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தால் சேதப்படுவதில்லை. (வெளி. 2 : 11), என சிமிர்னு சபைக்கு இயேசு கூறினார். சபைகளுக்கு பரிசுத்த ஆவியானவர் கூறியது என்ன என்று தெரிந்து கொள்ள ஒரே வழி புதிய ஏற்பாட்டை படிப்பது தான். இன்றைய சபைகளுக்கு ஆவியானவர் சொல்லுவது புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. பரிசுத்த ஆவியானவர் நமக்குச் சொல்லுவது எதையும் மனிதர்கள் எழுதும் புத்தகங்களிலிருந்து நாம் அறிய இயலாது. சபை சட்ட திட்டங்கள், விசுவாச பிரமாண ஏடுகள், சின்ன, பெரிய கையேடுகள் போன்ற புத்தகங்களை நாம் படித்து, அவற்றை நம்பி, அவைகளுக்குக் கீழ்ப்படியும் போது மனிதன் கூறுவதையே நாம் கேட்கிறோமே தவிர, தேவன் சொல்லுவதை அல்ல.

**நாம் அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.**

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பயன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." (எபி. 11 : 6) என எபிரேயருக்கு எழுதிய நிருபம் கூறுகிறது. அவருடைய குமாரன் பேரிலும் நாம் விசுவாசம் வைக்க வேண்டும். "... நானே அவர்

என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்'' என்று இயேசு கூறினர் (யோவான் 8 : 24). அவருடைய குமாரனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக, தேவனை விசுவாசிக்கிறோம் என அவருக்குக் காண்பிக்க வேண்டும். "ஒருவன், உனக்கு விசுவாசமுண்டு, எனக்கு கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே'' என யாக்கோபு கூறினர். (யாக். 2:18).

நாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் விசுவாசத்தால் செய்ய வேண்டும். அந்த விசுவாசம் வேதாகமத்தின் சொல்லியுள்ளபடி கிரியை செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

**நாம் அவரை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிருர்.**

ஆவியுடனும், உண்மையுடனும் தம்மை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிருர் என ஒரு சமாரியா நாட்டுப்பெண்ணிடம் இயேசு கூறினர். "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிருர். தேவன் ஆவியாயிருக்கிருர், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்'' என அவர் சொன்னர் (யோவான் 4 : 23,24). தேவனுடைய விருப்பத்தை நிறை வேற்றி அவரை பயபக்தியுடன் ஆராதிக்க வேண்டும்:

ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் கூடி, அவர் புகழ் பாடி, ஜெபம் செய்து, வசனங்களை தியானித்து, தேவனுடைய பந்தியில் கலந்து கொண்டு, நாம் அடைந்த ஆசீர்வாதங்களுக்கு ஏற்ப கொடுக்கவும் வேண்டுமென தேவன் விரும்புகிருர்:

**நமது நாவை அடக்க வேண்டுமென அவர் எதிர் பார்க்கிருர்.**

"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம், பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானல் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்'' (எபே. 4 : 29) நாம் பேசுபவை யாவும் விசுவாசத்தில் நம்மை உறுதிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.

நாம் பேசப் போவது பிறரை நல்வழிப்படுத்தாது எனக் கண்டால் அப் பேச்சைத் தவிர்க்க வேண்டும். "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்" (யாக். 1 : 26) என யாக்கோபு எழுதினார்.

**நாம் யோக்கியமானவராக இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார்.**

"அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்." (அப். 6 : 2, 3). இந்த ஏழு பேரும் கண்காணிகள் என நமக்கு நிச்சயமாகத் தெரியும். கண்காணிகள் யோக்கியமானவர்களாக இருக்கும் பட்சத்தில், மீதியுள்ள எல்லோருமே யோக்கியமானவர்களாக இருக்க முயற்சிப்பார்கள் "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனிதருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" (ரோமர் 12 : 17) என கிறிஸ்தவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

**முதலாவது நாம் இராஜ்ஜியத்தை தேட வேண்டும் என எதிர்பார்க்கிறார்.**

"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத். 6 : 33) என தன்னுடைய பிரசங்கம் ஒன்றில் இயேசு கூறினார். பரலோக இராஜ்ஜியம் என்பது கிறிஸ்துவின் சபையாகும். மற்ற எல்லா உலக காரியங்களுக்கும் முன்னர் சபைக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஏரியில் மீன் பிடிக்கச் செல்லாமல் அல்லது வேறு அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் சபை ஆராதனைகளுக்குச் செல்ல வேண்டும். ஆபாசக் கதைகளைப் படிக்காமல், வேதாகமத்தை அடிக்கடி படிக்க வேண்டும்.

தினமும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ நம்மால் முடிந்த அளவு முயல்வதே நமது முதல் கடமையாக இருக்க வேண்டும். "யாவ ரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி. 12 : 14) என எழுதப்பட்டிருக்கிறது.

தமிழில் : S. S. ராஜன் மூலம் : W. C. ஆண்டர்ஸன்

---

**தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனிதன்**

பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன் நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னுக உங்கள் எரிச்சல் தணியக் கடவது.

பிசாசுக்கு இடம் கொடாமலும் இருங்கள்.

திருடுகிறவன், இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினுல் நலமான வேலை செய்து, பிரயாசப் படக் கடவன்.

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானுல் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள.

சகலவிதமான கசப்பும் கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது.

ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

---

# தர்ப்பூசணி விதை

சில மாதங்களுக்கு முன்பு தர்ப்பூசணிப் பழத்துண்டு ஒன்றை நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்பழத்தின் அழகு எனக்கு வியப்பூட்டியது. அதன் விதைகள் சிலவற்றை சேகரித்து காய வைத்து, நிறுத்துப் பார்த்தேன். ஒரு பவுண்டு எடைக்குக் கிட்டத் தட்ட 5000 விதைகள் தேவை என்பதை அப்போது கண்டு பிடித்தேன். அந்த 40 பவுண்டு எடையுள்ள பழத்தில் எவ்வளவு விதைகள் இருக்கும் என ஒரு சிறு கணக்குப் போட்டுப் பார்த்தேன்.

இவ் விதைகளில் ஒன்றே ஒன்றை எடுத்து பூமியில் புதைத்து வைத்தால், சூரியனுடைய வெப்பத்தையும் மழையின் ஈரத்தையும் அது பெற்றுக் கொண்டு, தனது மூடியை உரிந்து போட்டு விட்டு வேலையில் இறங்குகிறது. அவ்விதையின் எடையைப் போல இரண்டு லட்சம் மடங்கை எங்கிருந்தோ பெற்று, ஒரு கொடியின் வழியாக தான் பெற்றதை செலுத்தி, ஒரு தர்ப்பூசணிப் பழத்தை உருவாக்கு-கிறது.! பழத்தின் வெளிப்புறம் சுற்றிலும் பச்சை நிறத்தில் அலங்-காரம், உட்புறம் சுற்றிலும் வெள்ளை, அதை ஒட்டி சிகப்பு நிற சதைப்பற்று; சிகப்பு நிறப் பகுதியில் ஒட்டிக் கொண்டு பரவலாக நிறைய விதைகள். ஒவ்வொரு விதையும் மேற் சொன்ன பழங்கள் பலவற்றை உற்பத்தியாக்கும் திறன் கொண்ட ஒரு தொடர்கதை!

அந்த சிறு விதையின் அற்புதமான வேலைத் திட்டத்தை அமைத்துத் தந்தது யார்? அதனுடைய மகத்தான பலத்தை எங்கிருந்து பெறுகிறது? வண்ணக் கலவைகளை அது உருவாக்கும் விதம் தான் என்ன? மணமும் ருசியும் அப்பழத்திற்கு எங்கிருந்து கிடைக்கிறது? எப்படி ஒரு அழகிய பழமாக அச்சிறு விதை மாறிப் போகிறது? அதன் வயிற்றுக்குள் எண்ணற்ற விதைகளை எங்கிருந்து கொண்டு வந்தது?

ஒரு தர்ப்பூசணி விதையின் சரித்திரத்தை தெளிவாக விளக்கிச் சொல்ல உங்களால் முடியாத பட்சத்தில், அவர் எதைச் செய்வார், எப்படிச் செய்வார் என சாவ வல்லமை படைத்த தேவனுடைய அதிகாரங்களைக் கேள்விக் குறியாக்கி வேலி போடும் வேலையில் நீங்கள் இறங்கலாமா?

மூலம்: W.J. பிரையன்

தமிழில்: ஸ்டெல்லா

# தெரிந்து கொள்ளுங்கள்

**பஸ்கா**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களால் கொண்டாடப் பட்டு வந்த மூன்று முக்கிய பண்டிகைகளுள் (பஸ்கா—புளிப்பில்லாத அப்பப் பண்டிகை, பெந்தேகொஸ்தே பண்டிகை, கூடாரப் பண்டிகை) பஸ்காவும் ஒன்றாகும். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும் முன்னே, இந்தப் பண்டிகையை ஆசரித்தார்கள் என்றும், இந்தப் பண்டிகை, வசந்தகாலத்திலே ஆசரிக்கப்பட்டு ஆடுமாடுகளின் தலையீற்றுகளைத் தேவனிடத்தில் பலியிடுகிறதற்காக இது உண்டாக்கப் பட்டதென்றும், இதன் உற்பத்தியை ஆபேல் யெகோவாவுக்கு காணிக்கையாகக் கொண்டு வந்த தலையீற்றுகளில் காணலாம் என்றும் சாஸ்திரிகள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். அப்படியிருந்தாலும், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து, அடிமைத்தனம் நீங்கிப் புறப்பட்டுப் போனதால், இந்தப் பண்டிகை புதிய கருத்து அடைந்து, அவர்களுக்கு முக்கியமான பண்டிகையானது.

பஸ்கா என்பதின் அர்த்தம், ''கடந்து போதல்'' என்பதாகும். இதனை ஆங்கிலத்தில் Pass Over எனக் கூறுகிறோம். ஏனெனில் இஸ்ரவேலர் பஸ்கா புசித்த அந்த ராத்திரியிலே கர்த்தர் எகிப்து தேசமெங்கும் கடந்து போய், அத்தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன்கள் மட்டும், முதற் பேருயிருக்கிறவைகளையெல்லாம் அதம் பண்ணினார். (யாத் 12:12) மேலும், இஸ்ரவேலரின் வீட்டு நிலையின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைக் கால்கள் இரண்டிலும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார் (யாத் 12 : 23).

அந்நாள் தொடங்கி, இந்நாள் வரைக்கும் யூதர்கள் இந்தப் பண்டிகையைத் தாங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்ததை ஞாபகப்படுத்துவதற்காக அனுசரித்து வந்தார்கள்.

பஸ்காப் பண்டிகைக்கு முதலாம் சரித்திரம் யாத்திராகமம் 12:21-27ல் காணலாம். இதில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு ஆட்டுக் குட்டியை எடுத்து, அடித்து, இரத்தத்தை அடையாளமாக கதவு நிலையில் தெளிக்க, தூதன் வீட்டிலுள்ளவர்களை அழிக்காதபடிக்கு, இவ்வீடுகளைக் கடந்துபோவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கிரியை நித்திய நியமமாக ஆசரிக்கப்பட வேண்டும் (யாத் 12:24). இன்னும், பஸ்காப் பண்டிகை எவ்விதமாக ஆசரிக்கப்பட வேண்டும் என்று, தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசேமூலமாகக் கட்டளை கொடுத்தார். இதனை யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் தெளிவாய்க் காணலாம்.

பிந்தின சரித்திரங்களில் வேறுகட்டளைகள் கூட்டப்பட்டன. (உபா 16 · 1-8). இரத்தத்தைத் தெளிக்கிறதைக் கூருமல், பஸ்காவின் பலியைக் குறித்து இப்பகுதி விசேஷமாய்ச் சொல்லுகிறது. இந்தப் பலியை வீடுகளில் அல்ல, தேவனுடைய ஆலயத்திலே பலியிட வேண்டியதாயிருந்தது. (உபா 16;2). இவ்வசனங்களில், பஸ்காப் பண்டிகை, புளிப்பில்லாத அப்பம் சாப்பிடுகிற பண்டிகையோடு இணைக்கப்பட்டது. (எசே 45:21).

கடைசியாக, நியாயப்பிரமாண புஸ்தகங்களில் வேறு கட்டளைகள் தோன்றின. (லேவி 23:5, யாத் 12:1-13, எண் 9:1-16). இவைகளில், யூதர்கள் பாபிலோனியா தேசத்தில் சிறையிருந்தபோது, பஸ்காப் பண்டிகையை அதிக திட்டமாய் அனுசரித்தார்கள் என்று எண்ணலாம். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு எருசலேமில் இந்தப் பண்டிகையை முக்கியமாய் ஆசிரிக்கத் தொடங்கினார்கள் (எஸ்ரு 6:19-27).

இயேசு கிறிஸ்துவினுடை காலத்தில், யூதர்கள் பஸ்கா பண்டிகையில், ஆட்டுக் குட்டியை சாப்பிடும்படிக்கு நிற்பதும். கதவு நிலைகளில் இரத்தத்தைத் தெளிப்பதுமாகிய சில சடங்குகளைக் கைக்கொள்ளாமலிருந்தாலும். அதிக வணக்கத்தோடும், பயபக்தியோடும் இந்தப் பண்டிகையை கொண்டாடினார்கள். எவ்விதமாய் என்றால், ஆபீப் அல்லது நிசான் எனும் மாதத்திலே 13ம் தேதி குடும்பத்தலைவர் யாவரும் தாங்கள் வீடுகளிலிருக்கும் புளித்த மாவைத் தேடிக் கண்டுபிடித்து அகற்றிப் போடுவார்கள் 14ம் தேதி முதல் ஏழு நாட்களுக்கு புளித்த மாவை சாப்பிடக்கூடாது. 14ம் தேதியில் யாதொரு வேலையும் செய்யமாட்டார்கள்.

சாயங்காலத்திலே ஜனங்கள், 10 பேர் முதல் 20 பேர் வரைக்கும் அடங்கிய கூட்டங்களாய் கூடி, தங்கள் ஆட்டுக் குட்டி

களைக் கொண்டுபோக, ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் ஒரு ஆள். ஆட்டுக்குட்டியோடு ஆலயப் பிரகாரத்துக்குள் பிரவேசிப்பான், எக்காள சத்தம் கேட்கும் பொழுது அங்கே வந்த ஒவ்வொருவனும் தான் கொண்டு வந்த ஆட்டுக்குட்டியை அடிப்பான். ஆசாரியர் இரத்தத்தை எடுத்து, அதைப் பலிபீடத்தின் அடியில் தெளித்து, கொழுப்பை பீடத்தில் வைத்து பலியிடுவார்கள். பலியிடும் கூட்டங்கள், ஆட்டுக்குட்டிகளை எடுத்துக் கொண்டு தங்கள் வீடுகளுக்குத் திரும்பி வருவார்கள். இரவு 10 மணிக்கு பஸ்கா விருந்து சாப்பிடுவார்கள். அதில் பலியிட்ட ஆட்டின் மாமிசத்தையும், கசப்பான பூண்டுகளையும் புளிப்பில்லாத அப்பங்களையும் சாப்பிட்டு, திராட்ச ரசத்தின் பாத்திரத்தில் நாலு தரம் பானம் பண்ணுவார்கள் இடையிலே "அல்லேல்" என்னும் பேர் பெற்ற 113-118 சங்கீதங்களைப் பாடுவார்கள் (மாற்கு 14:26), இரண்டாம் பாத்திரத்தைப் பானம் பண்ணின் பின்பு, மகன் தன் தகப்பனை நோக்கி, "இந்த விருந்தின் கருத்தென்ன?" என்று கேட்க, தகப்பன் விவரமாய்ச் சொல்ல வேண்டும் (யாத் 12:26).

பஸ்காப் பண்டிகைக் கொண்டாடுவதற்காகப் புற தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான யூதர்கள் எருசலேமுக்குப் போவார்கள். மற்ற யூதர்களைப்போல, இயேசுவும் பண்டிகைக் காலத்திலே எருசலேமுக்குப் போவது வழக்கம். (யோவா 2:13,23; 12:1-12). இயேசுவும் அவருடைய சீஷரும் பஸ்காப் போஜனம் செய்கிற வேளையில், அவர் கர்த்தருடைய இராஜபோஜனத்தை ஏற்படுத்தினர் (மத் 26:17-30, மாற் 14:17-26, லூக் 22:14-20). பஸ்காப் பண்டிகைக்கு பதிலாக கிறிஸ்துவின் சபை, இயேசு கட்டளையிட்ட இந்த இராஜப்போஜன விருந்தை நடத்தி, இயேசு கிறிஸ்துவைத் தங்கள் பஸ்காப் பலியாக எண்ணவேண்டும். (1 கொரி 5:7, 8).

## பஸ்காவும், இராப்போஜனமும்

பஸ்காவில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் யூதர்கள் தங்கள் கோத்திரப் பிதாக்ககளின் குடும்பங்களிலுள்ள முதற் பேறனவர்கள் இரட்சிக்கப் பட்டதையும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அடைந்த விடுதலையையும், நினைவுகூர்ந்தது போல இந்த கர்த்தரின் விருந்தில், கிறிஸ் தவர்களாகிய நாம் உலகத்துக்காக சிலுவையில் அறையுண்டு, தமது இரத்தத்தைச் சிந்தி, பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கின கிறிஸ்துவாகிய பஸ்காவை நினைவு கூறுகிறோம். (லூக் 22:19).

# பழைய-புதிய ஏற்பாடுகளின் இடைக்காலம்

புதிய ஏற்பாடு மொழி இனம் எல்லாம் கடந்து, உலகில் வாழும் எல்லா மனிதருக்காகவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. புதிய ஏற்பாடு போதிக்கும் சத்திய மார்க்கம் உடல் மார்க்கம் அல்ல! அது ஆன்ம மார்க்கமே. இவ் வேறுபாட்டை உணராமல் இன்றைய கிறிஸ்தவம் கொள்கை அளவில் ஒற்றுமையைவிட பிரிவினையை போதித்துக் கொண்டு இருக்கிறது!

நான் உங்களுக்கு புதிய ஏற்பாட்டை அறிமுகப்படுத்துகின்ற வேளையில், பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒன்றினை நீங்கள் அறிந்திட வேண்டும். பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி மல்கியா முதல் கிறிஸ்து வரைக்கும். சுமார் 400 ஆண்டுளுக்கு தேவ ஆவியினால் ஏவப்பட்டு பேசும் ஓர் தீர்க்கதரிசி எழும்ப வில்லை! என்பது கவனிக்கத்தக்கது. இந்த 400 ஆண்டு காலகட்டத்தை அறிஞர்கள் அமைதிக் காலம் என்பர் (Silent Period) யூதர்கள், நெகேமியா எஸ்றா போன்ற தலைவர் களுடன் பாபிலோனின் 70 ஆண்டு சிறை இருப்புக்குப் பின் எருசலேமுக்கு திருப்பி இருந்தனர். அவர்கள் சிறையிருப்பு நாட்களில் பட்ட துன்பங்கள் அனுபவித்த அவமானங்கள், கட்டாயப் படுத்தப்பட்ட விக்கிரக ஆராதனைகள், அவர்கள் நெஞ்சில் மாறாத வடுக்களாக அமைந்தன! அதன் எதிரொலியாக மிகுந்த பக்தியுடன் நியாயப்பிரமாணத்துக்குரிய தீர்க்க தரிசனத்தில் உரைக்கப்பட்ட மேசியாவை எந் நேரமும் எதிர்பார்த்து கொண்டு இருந்தனர்!

இக்கால அரசியல் உலகத்தை நாம் நோக்கினால் அசீரிய, பாரசீக ஆட்சிகளுக்குப் பின் மத்தியதரை நாடுகள் கிரேக்க ஆட்சியின் கீழே வந்தது (336 கி.மு.) மகா அலெக்சாண்டரை (Alexander the great) நாம் அறிவோம் அல்லவா? இக்காலத்தில் உலக அரங்கில் கல்வி, கலாச்சாரம், வாணிபம் விஞ்ஞானம், வானசாஸ்திரம், மருத்துவம், கட்டிடக்கலை, அரசியல் போன்ற துறைகள் வளர்ச்சி பெற்றது! கிரேக்கப் பேரரசின் அஸ்தமன நாட் களில் மெக்கபேயர்கள் (Maccabean) என்பவர்கள் தலைமையில்

மிகப் பெரிய அரசியல் - கலகம் யூதர்களின் தாய் நாட்டுப் போராட்டம் ஏற்பட்டது (கி. மு. 168) இக்கால வரலாற்றை கத்தோலிக்கர் தங்கள் பழைய ஏற்பாடு புத்தகத்தில் இணைத்துக் கொண்டுள்ளனர். (Apocrypha)

பின்பு கிரேக்கப் பேரரசை ரோமர் ஒடுக்கி உலகப்பேரரசை நிறுவினர். (கி. மு. 14?) ரோமர்கள் பெரும் தீனிக்காரர்களும் போர்க்குணமுடையவர்களாகவும் இருந்தனர். அடிமைத்தன (Slavery) ஆட்சி, அடிமைத்தன அமைப்பு, ஆகியவைகள் அவர்களுக்கு கைவந்த கலை! ஏறக்குறைய அன்றைய உலகம் சுமார் 50 விழுக்காடு அடிமை நிலையில் இருந்தது. யூதர்களின் பொன்னும் பொருளும் பாலஸ்தீனத்தில் மண்டிக் கிடக்கும் கனிவளங்களும் அவர்களின் கண்ணை உறுத்தியது. ஆகவே எருசலேம் முற்றிகையிடப்பட்டு ரோமர் கைவசம் வந்தது. ஜுலியஸ் சிசர் (Jueius caesar) ஏரோது (Herod) அகஸ்தியஸ் (Augustus) போன்ற மன்னர்களை நாம் அறிவோம் அல்லவா?

இக்காலத்தில் யூதர்கள் கொத்தடிமைகளாக சொல்லொணா துன்பம் அடைந்து வந்தார்கள் "யெகோவாவிற்கு, (தேவன்) பிரியமாய் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தாங்கள்படும் உபவத்திரங்களை புக்தியாகவும் "மூடப்பழக்கங்களாகவும் பாரம்பரிய வழிபாடுகளாகவும் (Tradition)" மாற்றிக் கொண்டனர். ஊருக்கு ஊர் ஜெப ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டது (Synagogue) யூதர்கள் மத்தியில் நம்பிக்கை, பக்தி சூழ் நிலை ரீதியாக பல்வேறு பிரிவினைச் சித்தாந்தங்கள் தோன்றலாயின.

**பரிசேயர்**

பரிசுத்தவான்களாக (Separated one) மோசேயின் நியாயப்பிரமாணத்தை சரியாகக் கைகொள்ள வேண்டும் என்ற பிரிவினர்கள இவர்கள். "தொடுதல்" "தீண்டுதல்" "ருசி பார்த்தல் நியாயப்பிரமாணத்தின் போர்வையில் தங்களை வெளிப்பார்வைக்கு பக்தர்களாக காட்டிக் கொண்டனர். இவர்களேயே பரிசேயர் (The Pharisees) ஆவர். நம் ஆண்டவர் எவ்விதம் அவர்களை கடிந்து கொண்டார் என அறிவோம்! மத் 15 3-8; மத் 23-1ம் அதிகாரம் காண்க. இவர்களில் நிக்கதேமு ((Nicodemus)

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு (Joseph of Arimathea) காமாலியேல் (Gamalial) தரிசு பட்டணத்தானாகிய சவுல் (Saul of Tarasus) ஆகியவர்கள் மிகப் பிரபலமானவர்கள்

**சதுசேயர்**

இவர்கள் அரசியல் வாதிகள் எனலாம். யூத தலைமைப் பீடத் (high priest-hood) தின் மீது மோகம் கொண்டு ரோமர் களுக்கு ஆதவரவாக ஒரு சமயத்திலும் யூதர்களுக்கு ஆதரவாக மற்றொரு சமயத்திலும் நடந்து வந்தனர். இவர்கள் சாதனையாளர் கள். ஆகவே இவர்களை சாதிக்கும் சேயர்கள்எனலாம்! (The Saddusees). இவர்கள் உயிர்த்தெழுதல்(Resurrection) ஆவிகள்' (Spirits) தூதர்கள் (Angels) முதலியவற்றை நம்பாதவர்கள்' மாற் 12 : 18, லூக் 20 :27 அப் 23 : 8,வாசிக்கவும்.

**வேதபாரகர்**

இந்த பிரிவினர் தங்களை பாபிலோனிய சிறை இருப்புக்கு முன், தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் உதவியாளனாக இருந்த பாருக்குடன் (Baruch) தங்கள் வம்சாவழியை ஒப்பிட்டுக் கொண்டு பழைய ஏற்பாட்டை 'பிரதி எடுத்து விற்பது' மற்றும் தொழில் ரீதியாக எழுத்தராக (SCRIBE) செயல் படுவதுமாக இருந்தனர்.

**பாவிகள்**

இந்த நான்காம் பிரிவினர் மிகப் பெரிய சமுதாயமாக வாழ்ந்தனர்! இவர்கள் மற்ற பிரிவினர்களால் தாழ்ந்தவர்களாக கருதப்பட்டனர். இவர்களின் சித்தாந்தம் எல்லாம் "ஏதோ என்னால் முடிந்தது! "என் மனச்சாட்சிக்குத் தெரியும்" மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா! பாவமோ புண்ணியமோ, நரகமோ, மோட்சமோ, எதிர்காலத்தை யார் கண்டது? என்று நாம் இன்று வாழவில்லையா? அதைப் போன்றே இம்மக்களும் நிர்விசாரமான வாழ்க்கை வாழ்ந்து சமுதாயத்தால் பாவிகள் என அழைக்கப்பட்டனர். (Sinner) நியாயப்பிரமாண சட்ட வரம்புக்குள் வராதவர்கள்.

ரோமர் : 3, 10—23, ரோ. 6 : 23, ரோ 7 : 24,

## பழைய ஏற்பாடும் இயேசு கிறிஸ்துவும்

இக்கால கட்டத்தில் தான் தேவனுடைய குமாரனும் மானிடரின் இரட்சகருமாகிய இயேசு பிறந்து அவர் நாசரேத்து ஊரில் வளர்ந்ததினாலே நசரேயனாகிய இயேசு என அழைக்கப் பட்டார். மத் 1 : 24 தமது 30வது வயதில் யோவான் ஸ்நானகனாலே திரு முழுக்குப் பெற்றார். மத் 3 : 13, 16, அது முதல் இயேசு பரலோக இராஜ்ஜியம் சமீபித்து இருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். மத் 4 : 17 பரலோக ராஜ்ஜியம் வருவதாக என வேண்டுதல் செய்தார் மத் 6 : 10 இராஜ்ஜியம் அவருடைய நாட்களில் வரும் என்று சொன்னார். மாற் 9 : 1. அந்த ராஜ்ஜியம் சபை என்றும், அதை தாம் கட்டுவதாகவும் கூறினார். மத் 16 18. தமது இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியது அல்ல என்று பிலாத்து விடம் கூறினார். யோவான் 8 : 36. மேலும் இந்த இராஜ்ஜியம் உலகம் உண்டானது முதல் பிதாவினால் ஆயத்தமாக்கப்பட்ட இராஜ்ஜியம் என்கிறார். மத் 25:34 இந்த ராஜ்ஜியத்தில் ஒருவர் அங்கத்தினராகுவதற்கு, மறுபடியும் பிறக்க வேண்டும் என்கிறார். யோ : 3 : 5

மேற்சொன்ன வசனக் குறிப்புகளை நாம் ஆராயும் பொழுது பழைய ஏற்பாட்டு பூமிக்குரிய இராஜ்ஜிய அமைப்பான ஆபிரகாம் சந்ததியான இஸ்ரவேலருக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைப் போன்றது அல்ல. கிறிஸ்துவானவர் அறிவித்த ராஜ்ஜியமோ உலகத்தின் நான்கு எல்லைகளையும் தொட்டு நிற்கின்றது. (மாற்: 16:15 கொலோ 1 : 23) அப்படியானால் நிச்சயமாக கிறிஸ்துவின் போதனைகள் ஆவிக்குரிய ஓர் ராஜ்ஜியத்தையே நமக்கு காண்பிக்கிறது. ஆகவே மத்தேயு 5:17- இல் நியாயபிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதுக்கு வந்தேன் என்று எண்ண தேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல; நிறைவேற்றுவதற்கே வந்தேன் என்றார். அப்படியானால் மோசே முதல் சுமார் 1500 ஆண்டுகள் இஸ்ரவேலர்களை மட்டும் ஆட்சி செய்து வந்த பழைய ஏற்பாட்டை தமது சிலுவை மரணத்தினால் நிறைவேற்றி ஓர் புதிய ஆவிக் குரிய ஏற்பாட்டை உலகில் வாழும் அனைவரோடும் அவர் ஏற்படுத்தியிருக்கிறார் என்பது தெரிவுஆகிறது அதனால் அன்றோ அவர் உயிர்தெழுந்த பிறகு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்

பட்டு இருக்கிறது என்றார் மத் 28 : 18 ஆகையால் நீங்கள் உலக முழுவதும் புறப்பட்டுப் போங்கள் என அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டார். அதாவது பிறப்பினால் பழைய ஏற்பாட்டை பின்பற்றி வந்த இஸ்ரவேலர்களை மட்டும் அல்ல இவ்வுலகத்தில் தேவன் அற்றவர்களாகவும் இயற்கை வணக்கக்காரரும், விக்கிர ஆராதனைக்காரரும் யாவரோடும் தேவனுக்கு கீழ்ப்படியும் பொழுது அவர்களுடன் புதிய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அப்படி-யானால் பழைய ஏற்பாடு மாற்றப்பட்டுள்ளது.

## புதிய ஏற்பாடு அமுலாக்கப்பட்டுள்ளது

அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டியதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி அவர்களை நோக்கி இதோ கர்த்தர் சொல்லுகிற தென்னவெனில் இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதர் குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கை ஏற்படுத்துங் காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும் படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே "அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை; அந்த உடன் படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே; நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்கிறார்: அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவர்களின் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்போது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள், ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும் ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டு வதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்-களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லு-கிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்கிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார். பழமையானதும் நாள் பட்டது மாயிருக்கிறது' உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது;

எபிரெயர் 8 : 7-13 என்று வாசிக்கிறோம். அப்படியானால் பழைய ஏற்பாடு எங்கே எவ்விதம் நீக்கப்பட்டுள்ளது?

நமக்கு எதிராடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துக் கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிச் சிறந்தார் கொலோ 2:14-15

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல! கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து, எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்து வீணாயிருக்குமே : கலா : 2.20: 21

இனி நமக்கு நியாயபிரமாணம் தேவைதானா? நியாயப்பிரமாண கிரியைக்காரர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இல்லை. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலா: 5:4

கிறிஸ்து தமது புதிய ஏற்பாட்டை அமுலாக்கிவிட்டார்! அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென். மத்தேயு 28: 18-20

புதிய ஏற்பாடு தேவனுக்கு கீழ்படிகிற யாவரையும் ஆளுகின்றது! இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும் படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள்: பிலி: 2: 10-12.

**பாவமன்னிப்பின் சட்டம்:**

பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது, உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோசமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

அப்போஸ்தலர் 2: 38-42

**முடிவுரை :**

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. இதற்காகவே நான் பிரசங்கி

யாகவும், அப்போஸ்தலனாகவும். புறஜாதிகளுக்கு விசு வாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன், I தீமோ 2: 5-7

இப்படியிருக்க, பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்த மாட்டாது எபிரெயர் : 10 : 1

ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச்சாட்சி சொல்லுகிறார்: எப்படியெனில் அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின், அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதாக சொல்லுகிறார். இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால் இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப் படவேண்டியதில்லையே! எபிரெயர் : 10 :14 : 18 அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்: எபிரெயர்: 7:22

மேற்படி வசனக் கூற்றுக்களால் பழைய ஏற்பாடு, கிறிஸ்துவின் மரணத்தில் நிறைவேறி, புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் அமுலாக்கப்பட்டுள்ளது. என அறியலாம்.

பீட்டர் சாலமேன்

# கிறிஸ்த்தவ அறத்தின் நான்கு தூண்கள்

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின் பற்றக் கடவன்" என்று இயேசு தாமே நிபந்தனை விதித்திருக்கிறார். (மத் 16 . 24) அவரைப் பின்பற்றுவது என்றால் அவரிடத்தில் காணப்பட்ட சிறப்புக்குண நலன்களை நாமும் பெற்றிருக்க வேண்டியது அவசியம்

அன்பு கூர்தல் அன்பு கூர்தல் கிறிஸ்தவத்தின் சிறப்பு நெறி. நேசிக்கிறவர்களை மட்டுமல்ல; சத்துருவையும் சிநேகிக்க வேண்டும் என்று போதித்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் (மத் 5 : 44) தன்னுடைய வாழ்க்கையையே அதற்கு இலக்கணமாக்கினார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்" ரோமர் 5 : ৩

தாழ்மை : "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் மத் 23:12; லூக் 14:11; 18:14

உண்மையான மனத்தாழ்மை என்பது கர்த்தருடைய மகத்துவத்தையும் அவருடைய வல்லமை, பரிசுத்தம் ஆகியவைகளையும், நம்முடைய பலவீனங்கள், பாவ இயல்புகள், தகுதியின்மை ஆகியவைகளை உணரும்போது ஏற்படுகிறது. லூக் 18 : 13

மன்னிப்பு ; நாம் நாள்தோறும் செய்கிற எண்ணற்ற பாவங்களையும் தவறுகளையும் தேவன் மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் ஆனால் மற்றவர்கள் நமக்குச் செய்யும் மிகச் சிறிய நீதிகளையும் தவறுகளையும் நாம் மன்னிக்க விரும்புவதில்லை ஆனால் நாம் மன்னிப்பதைப் பொறுத்துத்தான் நாமும் மன்னிக்கப்படுவோம் என்று வேதாகமம் கூறுகிறது.

"நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா, உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.

நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" மாற்கு 11:25,26

**தொண்டுள்ளம் :** மத் 25:31—45 வரை உள்ள வசனப்பகுதியை நாம் கவனமாக வாசித்துப் பார்த்தால், நாம் கிறிஸ்துவின் இனிய பெயரால் நாம் மற்றவர்களுக்குச் செய்யும் சேவைகளைக் கர்த்தர் தனக்குச் செய்ததாகவே நினைத்துப் பாராட்டி பலன் அளிக்கிறார் என்பதை நாம் உணர முடியும்.வீண் சடங்காச் சாரம், உதட்டளவு உபச்சாரம், பக்தியின் வேஷம் ஆகியவைகளைக் காட்டிலும் துன்பப் படுகிறவர்களின் துயர் துடைத்து, ஆறுதல் சொல்லி உபசரிப்பதே மாசற்ற தேவ பக்தி என்று யாக்கோபு (யாக்கோபு (யாக் 1 : 27; 2:15,16) கூறுகிறார். அதை அப்போஸ்தலன் யோவானும் ஆமோதிக்கிறார் யோவான் 3 : 17,18.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள்" என்றார் (மத் 9 : 9) பின்பற்றி வருதின் முழு அர்த்தத்தை மக் 19 : 21-ம் வசனத்தில் கூறுகிறார் ஆம், சகோதரியே, இயேசுவின் பெயரைத் தரித்துக் கொண்டு அவரைக் கர்த்தாவே என்று ஒலி பெருக்கிகளை வைத்துக் கொண்டு ஓலமிடுவது அவரைப் பின்பற்றுவதாகி விடாது. அவருடைய உபதேச நெறிகளையும், அவருடைய வாழ்க்கையின் அடிச் சுவட்டைப் பின் பற்றி அற வழியின் நடப்பதின் மூலமே அவருக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ்ந்து மறுமையில் அவரோட கூட இருக்கவும், ஆருகை செய்யவும் முடியும்.

# அற்புத வரங்கள் — அவற்றை அடைந்த விதம் எவ்வாறு?

இயேசு கிறிஸ்து, அப்போஸ்தவர்கள் இன்னும் சில ஆதிக்-கிறிஸ்தவர்கள் அடைந்திருந்த அற்புதங்கள் செய்யும் வல்லமைகள் பற்றி வேதாகமத்தைப் படிக்கும் போது நாம் அறிகிறோம். ''இந்த வல்லமையை இவர்கள் எவ்வாறு பெற்றனர்?''- இதுதான் நமது கேள்வி.

கிறிஸ்து இந்த வல்லமையை அவருடைய பிதாவிடமிருந்து நேரிடையாகப் பெற்றார் (யோவான் 10:37,38) எனக் காண்கிறோம் அப்போஸ்தலர்களோ பரிசுத்த ஆவியானவரால் இவ்வல்லமையைப் பெற்றனர், (யோவான் 14:26; 16:13, அப்போ. 1:58; அப் 2) எனவும், சில ஆதிக்கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்கள் தங்கள் பேரில் கைகளை வைத்ததால் இந்த வல்லமையைப் பெற்றனர் (அப்.8:5-17), எனவும் தெரிந்து கொள்ளுகிறோம்.

அப்போஸ்தலர் நடபடி 8 ம் அதிகாரத்தை கவனமுடன் காண்க:

1. அப்போஸ்தலன் அல்லாத பிலிப்பு அற்புதங்களைச் செய்தார் (வசனம் 6).

2. விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். (வசனம் 12)

3. என்ற போதிலும் இச்சந்தர்ப்பத்திலே அற்புத வரங்களை அவர்கள் பெறவில்லை. (வசனம் 15-16)

(1) சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர் பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு.

(2) நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்.

3) அழிந்து போகிற போஜனத்துக்காக அல்ல; நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகவே கிரியை நடப்பியுங்கள்.

YOUR ATTENTION PLEASE :

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker:Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9-15 P. M.
Thursdays-9:00 to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
All Correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays -2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
All Correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
All correspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA** The Voice of Truth-Speaker:Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2-00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசகப்பெருமக்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

நடந்து முடிந்த திருமறை ஆசான் ஆண்டு விழா மற்றும் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொண்டும், கடிதங்கள், தந்தி மூலமாக வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் உற்சாகப்படுத்திய அனைத்துப் பேருக்கும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பங்கு பெற விரும்பியும் சூழ்நிலைகளாலும், உடல் நலக்குறைவுகளினாலும், பாதிக்கப்பட்டு வரமுடியாமற் போன அனைத்துப் பேருக்காகவும் ஜெபிக்கிறோம். அடுத்த முறையாவது தேவன் உங்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பை நல்குவாராக.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press.
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE - 638 001.